TAM207C

# கதைவரைபடம் உருவாக்குதல்

கதை வரைபடம் உருவாக்குவதன் மூலம் மாணவர்களின் புரிதலை சுருக்கமாக வெளிப்படுத்த முடியும். கதையின் பல்வேறு கூறுகளை அவர்களால் புரிந்து கொள்ள முடியும். தங்கள் பெறும் பல்வேறு தகவல்களை முறையாக ஒருங்கிணைக்கும் திறன் வளரும். தேவையான தகவல்களை மட்டும் வரிசையாகக் கூறும் திறனையும் வளர்த்துக் கொள்வர்.

- முதலில் ஆசிரியர் மாணாவர்களுக்குத் தெரிந்த ஏத்ஏனும் ஒரு கதையை நினைவுபடுத்த வேண்டும்.
- ஒரு கதையைக் கூறி முடித்த பின், மாணவர்களை அக்கதையை ஐந்தே வரிகளின் கூறச்செய்ய வேண்டும்.
- ஆசிரியர் கதையின் தொடக்கம், முக்கிய நிகழ்வு, திருப்புமுனை, முடிவு என்று கதையைப் பல பகுதிகளாகப் பிரித்து மாணவர்களை வழிநடத்த வேண்டும்.
- எந்த நிகழ்வு முக்கியமானது, எந்த நிகழ்வைத் தவிர்க்கலாம், போன்ற விவாதங்கள் மிகவும் அவசியமானது.
- அவ்வாறு உருவாகிய கதைச்சுருக்கத்தினைக் கரும்பலகையில் வரிசைக்கிரயமாக எழுத வேண்டும்.
- இவ்வரிகளை ஏதேனும் ஒரு வடிவமைப்பில் எழுதும் போது மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும்.
- பிறகு மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு வடிவமைப்பைக் (Templet) கொடுத்து கதைவரைபடத்தைத் தயாரிக்கச்சொல்ல வேண்டும். கதை வரிகள் அவர்களின் சொந்த நடையில் இருக்கலாம்.
- கதைவரைபடங்கள் எழுத்துக்களாகவோ, படங்களாகவோ அல்லது இரண்டும் சேர்ந்தோ இருக்கலாம்.
- செயல்பாடு முடிந்தவுடன், ஒவ்வொரு குழுவும் அவர்களின் கதை வரைபடத்தை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- அப்போது முழுவகுப்பில் ஆசிரியர் கதையின் தொடக்கம், முக்கிய நிகழ்வு, திருப்புமுனை, முடிவு போன்றவை வரிசையாக எழுதப்பட்டுள்ளதா என்ற உரையாடலை மாணவரிடையே நிகழ்த்த வேண்டும்.
- இச்செயல் மாணவர்களின் புரிதலை மேலும் செம்மைபடுத்தும்

- மாதிரி கதைவரைபடம்:




மேலும் சில மாதிரிகள்:










